பட்டனமும் சூழலும் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 12 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபையின் இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் படியான வங்கி மீதி முறையே ரூபா.292,474 மற்றும் ரூபா.428,690 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அத்திகதியில் உள்ளவாறான வங்கி மீதியாக முறையே ரூபா.608,630 மற்றும் ரூபா.400,183 தொகைகளாகக் காட்டப்பட்டதனால் வங்கி மீதி ரூபா.287,649 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி ஊழியர் கடன் மீதி ரூபா.11,151,630 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடன் மீதி ரூபா.13,028,854 ஆகக் காணப்பட்டது. இதனால் ஊழியர் கடன் மீதி ரூபா.1,877,224 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் 42 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.2,131,856 மொத்த தொகையான முற்பணங்கள் அவர்களிடமிருந்து மீளப்பெறப்பட்டிருந்த போதிலும் அவை நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக பெறவேண்டிய முற்பணங்களாகக் காட்டப்பட்டுவருகின்றன.

(ஈ) ஆதனவரிப் பேரேட்டின் பிரகாரம் சபையின் ஆதனவரி அறவீடு ரூபா.26,391,169 தொகையாக வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அக்கூற்றில் ரூபா.25,811,127 தொகையாக காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா.5,80,042 தொகை குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் மின் பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்படாதிருந்த போதிலும் ரூபா.2,346,000 தொகையான மின் பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட்டதாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

அறவிட வேண்டிய வீதவரி ரூபா.15,182,911 தொகை தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் பிரிவு 571 | மக்கள் நீர் இணைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு பிரதேச சபையினால் அனுமதி வழங்குவதற்காக அறவிடப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வைப்புக் கணக்கில் வைக்கப்பட்ட ரூபா.335,750 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் மீது உரிய ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் செயற்பாடுகள் ரூபா.60,326,840 செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா.36,061,611 தொகையான செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

(அ) சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை 31.12.2016 |
|---|---|---|---|
| | ரூபா “000” | ரூபா “000” | ரூபா “000” |
| வீதவரிகளும் வரிகளும் | 24,918 | 25,811 | 15,182 |
| வாடகைகள் | 2,188 | 4,067 | 752 |

| | | | |
|---|---|---|---|
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,072 | 5,410 | 94 |
| ஏனைய வருமானம் | 5,803 | 4,692 | 1,523 |

(ஆ) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சுற்றுலா விடுதிகளின் ஆண்டு வருமானத்திலிருந்து 1% உரிமைக் கட்டணம் அறவீடு செய்தல் வேண்டும். எனினும் சபையின் எல்லைக்குள் காணப்படும் 06 சுற்றுலா விடுதிகளில் 02 சுற்றுலா விடுதிகளுக்கு மீளாய்வாண்டிற்கான உரிமைக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) விடுதி வாடகை, கட்டட வாடகை மற்றும் உப்புவெளி சந்தைக் குத்தகை என்பன தொடர்பாக ரூபா. 237,169 மொத்தத் தொகையினை அறவீடு செய்ய சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா.15,182,917 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் வாசகர்களுக்கு வழங்கப்பட்ட 2,563 நூலகப் புத்தகங்கள் இன்று வரை வாசகர்களிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 03 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.34,500 தொகையான நிலுவைக் கடனை அவர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புப் பணம் குறித்த மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்துக்கு செலுத்தல் வேண்டும். எனினும் சபையில் கடமை புரிந்த இரண்டு ஊழியர்களுக்கான 2014 மே தொடக்கம் செப்தெம்பர் வரையான காலத்திற்குரிய ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புப் பணத்தை அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் உரிய காலத்தில் செலுத்துவதற்குத் தவறியதனால் சபை ரூபா.17,079 தொகையை தண்டப்பணமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

4. ஒப்பந்த நிர்வாகம்

பின்தங்கிய உள்;ராட்சி அதிகார சபைக்களுக்கான அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடலிப் பிள்ளையார் கோயில் வீதியைத் திருத்தம் செய்வதற்காக சபையினால் ரூபா.799,860 தொகைக்கு 2016 திசெம்பர் மாதத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இவ் வேலைக்குத் தேவையான தார் பரல்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ஒரு பரல் ரூபா.9,900 தொகையும் போக்குவரத்துச் செலவு ரூபா.1,000 தொகையையும் சேர்த்து ரூபா.10,900 தொகைக்கு கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்த போதிலும் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து ஒரு பரல் ரூபா.13,000 விலையில் 28 பரல்களையும் கொள்வனவு செய்ததனால் ரூபா.58,800 தொகையை மேலதிகமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டதுடன் தனியாரிடம் கொள்வனவு செய்த தார் உரிய தரத்துடையதா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) இவ்வேலைக்காகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 4356 லீற்றர் தார் போதுமானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் 5040 லீற்றர் தார் (28 பரல்) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததனால் 2017 ூன் 21 ஆம் திகதி மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது மேலதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்ட 684 லீற்றர் தார் களஞ்சியத்தில் காணப்படாமையால் சபைக்கு ரூபா.49,390 தொகையான இழப்பு ஏற்பட்டுள்ளது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

புறநெகும திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2014 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 16 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியில் 08 கடைகள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படுதல். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |